A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 54 / 2024**

திருமதி R. தேனாம்பிகா,
க/பெ. ஞானசேகரன்,
எண்.2/1, பிள்ளையார் கோவில் தெரு,
(தலைமை தபால் நிலையம் எதிரில்),
பட்டுக்கோட்டை – 614 601.

………மேல்முறையீட்டாளர்
(திருமதி R. தேனாம்பிகா &
Rep. by திரு M. ஞானசேகரன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/ நகரியம்/தஞ்சாவூர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10A, TNEB, கோர்ட் ரோடு, தஞ்சாவூர் – 613 001.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரியம்/தஞ்சாவூர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10A, TNEB, கோர்ட் ரோடு, தஞ்சாவூர் – 613 001.

3) உதவி மின்பொறியாளர்/ இ&ப / அருளானந்த நகர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு, தஞ்சாவூர் – 613 403.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு M. மணிகண்டன், செயற்பொறியாளர்/ இ&ப/ நகரியம்/தஞ்சாவூர்
திரு G. பாலநேத்ரம், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரியம்/தஞ்சாவூர்
திரு A. அழகர்சாமி, உதவி மின்பொறியாளர்/ இ&ப / அருளானந்த நகர்)

**மனு பெறப்பட்ட நாள்: 15-07-2024**

**கேட்புரை நாள் : 13-09-2024**

**ஆணை நாள்: 24-09-2024**

15.07.2024 அன்று பெறப்பட்ட திருமதி R. தேனாம்பிகா, க/பெ. ஞானசேகரன், எண்.2/1, பிள்ளையார் கோவில் தெரு, (தலைமை தபால் நிலையம் எதிரில்), பட்டுக்கோட்டை – 614 601 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 54/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 13.09.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

3323/4, நேதாஜி தெரு, பாத்திமா நகர், நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர் என்ற முகவரியில் தான் புதியதாக கட்டிய வீட்டிற்கு தற்காலிக மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தான் புதியதாக கட்டிய புதிய வீட்டிற்கு தற்காலிக மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் இணையதளம் மூலம் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய இடத்தினை ஆய்வு செய்த உதவி பொறியாளர்/ இ.பரா/ அருளானந்த நகர் அவர்கள் விண்ணப்பத்தினை நிறுத்தி (Hold) வைத்து குறைபாடுகள் உள்ளவை சரி செய்யுமாறு கோரியதாகவும், போதிய கால இடைவெளியில் குறைபாடுகள் சரி செய்யவில்லை என்பதால் விண்ணப்பம் இரத்து செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 04.04.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம் 25.06.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 25.06.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*புகார் மனுதாரர் கோரிக்கை தொடர்பாக விசாரணை செய்ததில் மேற்பார்வை பொறியாளர்/ இயக்கம்/ மின் தொடரமைப்புக் கழகம்/ திருச்சி அவர்களின் அறிக்கையின் வாயிலாக மனுதாரர் கட்டிவரும் புதிய வீடு கீழே உட்புறம் 0.3 மீட்டர் மின் நில இணைப்பு செல்கிறது. எதிர்காலத்தில் அமைக்கப்படவுள்ள மின்பாதைக்கு அடியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரின் வீட்டிற்கும் மிகை உயரழுத்த மின்பாதைக்கும் இடையே 2.9 மீட்டர் இடைவெளி தூரம் இல்லாததால் மின்இணைப்பு வழங்குவது பாதுகாப்பு ஆனது அல்ல என்று தெரிவித்ததை தொடர்ந்து தங்களுக்கு புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க பரிசீலனை செய்ய இயலாது என்று மன்றத்தினால் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 13.09.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திருமதி R. தேனாம்பிகா மற்றும் அவருடைய பிரதிநிதி திரு M. ஞானசேகரன் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு M. மணிகண்டன், செயற்பொறியாளர்/ இ&ப/ நகரியம்/தஞ்சாவூர், திரு G. பாலநேத்ரம், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரியம்/தஞ்சாவூர் மற்றும் திரு A. அழகர்சாமி, உதவி மின்பொறியாளர்/ இ&ப / அருளானந்த நகர், தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் திருமதி R. தேனாம்பிகா W/o M. ஞானசேகரன், தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட 3323/4, நேதாஜி தெரு, பாத்திமா நகர், நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர் என்ற முகவரியில் புதிதாக வீடு கட்டி வருவதாகவும், அந்த புதிய வீட்டிற்கு தற்காலிக மின் இணைப்பு வேண்டி கடந்த 06.04.2023 அன்று தங்கள் பகுதிக்குட்பட்ட மின்வாரிய அலுவலகத்திற்கு online மூலமாக விண்ணப்பம் அளித்ததாகவும், அதனை பெற்றுக் கொண்ட மின்வாரிய அதிகாரிகள் தனது இடத்தை கள ஆய்வு செய்து தன் கட்டிடத்திற்கு உரிய கட்டிட அனுமதி சான்றை பெற்று மின்வாரிய அலுவலகத்தில் சமர்ப்பித்து மின்இணைப்பு பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்திய நிலையில் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்து அதனை பெற்று வந்து மின்வாரிய அலுவலகத்தில் சமர்ப்பிக்கச் சென்ற பொழுது தன்னுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக கூறி முதல் முறையாக மின் இணைப்பு வழங்கிட மறுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

5.2 06.04.2023 அன்று முதல் விண்ணப்பித்ததாகவும், Ref No.200064730423419 நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், இரண்டாவது விண்ணப்பத் தேதி 07.07.2023 எனவும், Ref No.200064730224107 நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறாக இரண்டாவது முறையாக தனது கட்டிட அனுமதி சான்றுடன் விண்ணப்பம் செய்த மனுவை நிராகரித்துவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அதற்கான காரணமாக அதிகாரிகள் சொன்னது என்னவெனில் தனது புதிய வீட்டிற்கும் உயர் மின்னழுத்தப்பாதை 110 KV (EHT)க்கும் 2.9 மீட்டர் இடைவெளி இல்லை எனவும், அதன்பிறகு மக்களுடன் முதல்வர் முகாமில் முறையிட்டதாகவும் அதனை ஏற்ற மின்வாரிய உயர் அதிகாரிகள் மூன்று பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்து தனது இடத்தை கள ஆய்வு செய்திட உத்தரவிட்டதன் பேரில் அக்குழுவினர் தனது இடத்தை ஆய்வு மேற்கொண்டு தனது கட்டிடத்திற்கும் அந்த குறிப்பிட்ட உயர் மின்னழுத்தப் பாதைக்கும் 5.4 மீட்டர் இருப்பதாக வரைபடம் மூலமாக தெரிவித்துள்ள நிலையிலும் மீண்டும், மீண்டும் 2.9 மீட்டர் இடைவெளி இல்லை என்ற தவறான விளக்கத்தை கொடுத்து கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக தனது வீட்டிற்கு தற்காலிக மின் இணைப்பு கூட வழங்கிடமறுத்து வருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அந்த பகுதியில் பெரும்பாலான வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மின்வாரியத்தின் 2.9 மீட்டர் இடைவெளி என்ற விதியை மீறியே அதன் அடியில் கட்டப்பட்டுள்ள நிலையிலும் இந்த விதியை கருத்தில் கொள்ளாமல் மின் இணைப்பு பெற்றுள்ள நிலையில் தனது ஒரே ஒரு சிறிய வீட்டிற்கு மட்டும் மின் இணைப்பு வழங்கிட மறுத்து வருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தான் தற்பொழுது தனது வீட்டை வங்கிக்கடன், நகைக் கடன் மற்றும் இதர கடன்கள் பெற்று கட்டிய நிலையிலும் அந்த வீட்டிற்கு தன்னால் குடியேற முடியாத நிலையில் தனது குழந்தைகளை அங்குள்ள பள்ளியில் சேர்த்து படிக்க வைத்துக் கொண்டு மிகுந்த சிரமமான நிலையிலும் பொருளாதார ரீதியாக தனது அனைத்து முதலீடுகளையும் இந்த வீட்டிற்கே செலவு செய்துவிட்டு புதிய வீட்டில் வசிக்க முடியாமல் மிகுந்த சிரமத்திலும், தானும் தனது குடும்பத்தினரும் மிகுந்த மன உளைச்சலில் வாழ்ந்து வருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். எனவே, இந்த மேல் முறையீட்டு மனுவை மதிப்பிற்குரிய இந்த குறைதீர் மன்றத்தில் சமர்பிப்பதாகவும், இதற்குரிய அனைத்து ஆதாரங்களையும், கட்டிட அனுமதிச் சான்று, வீட்டு வரி ரசீது, மின்இணைப்பிற்ககான பணம் செலுத்திய ரசீது மற்றும் வீட்டின் புகைப்படம் என்று இது சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் நேரில் விசாரணைக்கு ஆஜராகும் பட்சத்தில் தங்கள் பார்வைக்கு சமர்பிப்பதாகவும், எனவே

தனது தரப்பு நியாயங்களை ஏற்று உரிய நிவாரனம் வழங்கிட வேண்டுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 **<u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 தஞ்சாவூர் நகரிய கோட்டம், அருளானந்த நகர் பிரிவிற்குட்பட்ட பாத்திமா நகர் நேதாஜி தெருவில் எண்.3323/4–ல் திருமதி. R.தேனாம்பிகா அவர்கள் புதிதாக வீடுகட்ட ஆயத்த பணிகள் (earth work) நடைபெற்று வந்த நிலையில் க.எண்.உ.பொ/மிபா/மா.கோவில்/கோ.கட்டு/அ.எண்.38/2022–23, நாள்.01.12.2022 (TANTRANSCO) கடிதம் மூலம் 110 கேவி தஞ்சாவூர் திருவாரூர் மிகை உயர் அழுத்த மின்பாதை (EHT) கோபுர எண்.24 மற்றும் 25 க்கு கீழே கட்டிடம் கட்ட அடித்தளம் அமைக்கும் பணி நடைபெறுவது கண்டறியப்பட்டு உதவி பொறியாளர், மின்பாதை தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மாரியம்மன் கோவில் அவர்கள் மூலம் கட்டிடம் வாரிய விதிகளின்படி மின்பாதையில் இருந்து பக்கவாட்டில் (Horizontal) குறைந்த பட்சம் 2.9 மீட்டர் இருக்குமாறு மாற்றி அமைக்க புகார் மனுதாரருக்கு கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 ஆனால் நுகர்வோர் அதனை கருத்தில் கொள்ளாமல் தொடர்ந்து வீடு கட்டும் பணியை செய்து வந்து கொண்டு கடந்த 06.04.2023 அன்று தற்காலிக மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலம் விண்ணப்பித்துள்ளதாகவும், இடத்தினை ஆய்வு செய்த உதவி பொறியாளர்/ இபரா/ அருளானந்த நகர் அவர்கள் விண்ணப்பத்தினை நிறுத்தி (Hold) வைத்து குறைபாடுகள் உள்ளவை சரி செய்யுமாறு கோரியுள்ளதாகவும், போதிய கால இடைவெளியில் குறைபாடுகள் சரி செய்யவில்லை என்பதால் விண்ணப்பத்தை இரத்து செய்ய உதவி பொறியாளர்/ இபரா/அருளானந்த நகர் அவர்களால் பரிந்துரை செய்து செயற்பொறியாளர் அலுவலகத்தில் கடந்த 06.05.2023 அன்று பெறப்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 தற்காலிக மின் இணைப்பு விண்ணப்பம் இரத்து செய்த நிலையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தில் கடந்த 23.12.2023 அன்று புகார் மனுதாரர் மனு அளித்து இருந்ததாகவும், புகார் மனு மீது கடத்த 04.01,2024 மற்றும் 09.01.2024 ஆகிய தேதிகளில் உதவி பொறியாளர்/ மின்பாதை/ மாரியம்மன் கோவில் (TANTRANSCO)

மற்றும் உதவி பொறியாளர்/இபரா/அருளானந்த நகர் (TANGEDCO) ஆகியோர்கள் 09.01.2024 அன்று கடிதம் வாயிலாக 110 கேவி தஞ்சாவூர் திருவாரூர் மின்பாதைக்கு கீழே வீடு கட்டும் பணிகள் நடைபெறுவதாலும், பக்கவாட்டில் (Horizontal) குறைந்தபட்ச இடைவெளி 2.9 மீட்டர் இல்லாமல் மின்பாதைக்கு கீழே கட்டிடம் கட்டி உள்ளமையால் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள இயலாது என நுகர்வோருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 புகார் மனுதாரர் மீண்டும் 21.01.2004 அன்று மேற்பார்வை பொறியாளர்/தமிபவ/ தஞ்சாவூர் அவர்களிடம் தெரிவித்த புகார் தொடர்பாக மேற்பார்வை பொறியாளர்/ தமிபவ/ தஞ்சாவூர் அவர்கள் புகார்தாரர் TANGEDCO, TANTRANSCO ஆகிய அலுவலர்கள் மூவரும் கூட்டாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்க கோரினார்கள் என்றும், மேற்படி ஆய்வில் 110கேவி EHT மின்பாதை நில இணைப்பு வயருக்கு (Earth wire) கீழே மற்றும் எதிர்காலத்தில் அமைய உள்ள மின்பாதைக்கு கீழே (Double Circuit tower) புதிய கட்டிடம் அமைந்து உள்ளது எனவும், வாரிய விதிகளின்படி 110கேவி மின்பாதையில் பக்கவாட்டில் (Horizontal) குறைந்தபட்சம் 2.9 மீட்டர் பக்க இடைவெளியில் கட்டிடம் இருக்க வேண்டும் எனவும் புதிய மின் இணைப்பு தங்களது கட்டிடத்திற்கு வழங்க சாத்திய கூறுகள் இல்லை என முத்தரப்பு ஆய்வு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு அறிக்கை அளிக்கப்பட்டதாகவும், அதில் நுகர்வோர், TANGEDCO, TANTRANSCO அலுவலர்கள் கையொப்பமிட்டு அதன் நகல் புகார் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்

6.5 புகார் மனுதாரர் தலைமைப் பொறியாளர்/ பகிர்மானம்/ தஞ்சாவூர் அவர்களிடம் கடந்த 07.02.2024–ல் மனு அளித்துள்ளதாகவும், இதனை தொடர்ந்து கடந்த 19.02.2024 அன்று செயற்பொறியாளர்/ இயக்கம் / 230 கேவி துணை மின் நிலையம், தஞ்சாவூர் செயற்பொறியாளர் இபரா/ நகரியம்/ தஞ்சாவூர் மற்றும் புகார் மனுதாரர் ஆகியோர் மீண்டும் கள ஆய்வு செய்ததில் தாங்கள் கட்டி வரும் வீட்டிற்கு மேல் உட்புறம் நில இணைப்பு வயர் (Earth wire) செல்கிறது என்றும் எதிர்காலத்தில் அமைய உள்ள மின்பாதைக்கு அடியில் கட்டிடம் உள்ளது என்றும் வாரிய விதிகளின்படி கட்டிடத்திற்கும் மின்பாதைக்கும் 2.9 மீட்டர் இடைவெளி குறையாமல் இருக்க வேண்டும் என புகார் மனுதாரரிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 இந்நிலையில் புதிய வீடு முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு மீண்டும் 07.02.2024 அன்று புதிய மின் இணைப்பு வேண்டி மீண்டும் விண்ணப்பித்துள்ளதாகவும், இடத்தினை கள ஆய்வு செய்த உதவி பொறியாளர்/ இபரா/ அருளானந்த நகர் அவர்கள் 26.02.2024 அன்று நிறுத்தி வைத்து குறைபாடுகள் உள்ளவற்றை சரி செய்ய கோரியுள்ளதாகவும், (Application put on hold for attending defects in Horizontal clearance from 110KV tower line to building is not adequate) குறைபாடுகள் சரி செய்யாத நிலையில் கடந்த 07.03.2024 ல் ரத்து செய்ய உதவி பொறியாளர் இபரா/ அருளானந்த நகர் அவர்கள் பரிந்துரை செய்த விண்ணப்பம் செயற்பொறியாளர் அலுவலகத்தில் 14.03.2024-ல் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேற்பார்வை பொறியாளர்/இயக்கம்/திருச்சி அவர்களின் அறிக்கையில் புகார் மனுதாரர் கட்டியுள்ள வீட்டிற்கு மேலே 0.3 மீட்டர் அருகில் இணைப்பு வயர் (Earth wire) செல்கிறது என்றும் எதிர்காலத்தில் அமைக்கப்பட உள்ள மின்பாதைக்கு அடியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றும் வாரிய விதிகளின்படி கட்டிடத்திற்கும் EHT மின்பாதைக்கும் 2.9 மீட்டர் இடைவெளி (Horizontal) மிகாமல் இல்லாதமையாலும் மின் இணைப்பு வழங்க பாதுகாப்பானது அல்ல என தெரிவித்துள்ளதை தொடர்ந்து புதிய மின் இணைப்பு வழங்க பரிசீலனை செய்ய இயலாது என்றும் தலைவர் தஞ்சாவூர் மின்பகிர்மான வட்ட குறைதீர் மன்றம், தஞ்சாவூர் அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 நுகர்வோர் புகார் மனுவில் தெரிவித்துள்ளதுபோல் அவரது மனைக்கு அருகில் புதிய மின் இணைப்பு 473-016-1148 கடந்த 24.10.2019ல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மின் இணைப்பு வழங்கியது தொடர்பாக உதவி பொறியாளர் மற்றும் பணியாளர்கள் மீது துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கட்டிடத்திற்கும் மிகை உயர் அழுத்த மின்பாதைக்கும் உள்ள இடைவெளி CEA (Measure relating to safety and electric supply) Regulation 2010-ன் 60 மற்றும் 61வது விதியின்படி 61. Clearance from building of lines of voltage exceeding 650 V.

(4) For High voltage system, Horizontal clearance on the basis of max. Deflection due to wind process from building should be maintained. 110 கேவி – Horizontal clearance 2.9 மீட்டர் இருக்க வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேற்படி புதிய கட்டிடத்தை கடந்த 06.09.2024 அன்று மின் விசையுடன் தொடர் பணி/ திருச்சி (Hot Lines) மூலம் அளவீடு செய்யப்பட்டதாகவும், அதில் மின்பாதை செல்லும் பகுதியில் 5.1 மீட்டர் மின் கோபுரத்திற்கு (Arm) உட்புறமாக பக்கவாட்டு இடைவெளியில் புதிய கட்டிடம் உள்ளதாகவும், ஆனால் மற்றொரு Arm–ன் உட்புறமாக பக்கவாட்டு இடைவெளியின்றி கட்டிடம் உள்ளதாகவும், HOT Lines அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர்/ மின்பாதை/ தஞ்சாவூர் அவர்களின் வரைபட கடித நகல் இணைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 இவ்வழக்கில் CEA விதி 62–ன்படி எந்த ஒரு புதிய கட்டிடமும் EHT மின்பாதைக்கு இடையில் கட்டக்கூடாது என உள்ள நிலையில், கட்டுமான பணி துவக்க ஆயத்தமான நிலையிலேயே மின் தொடரமைப்பு கழகத்தின் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டும் அதனை கடைப்பிடிக்காமல் வீட்டு பணிகள் துவக்கி கட்டி முடிக்கப்பட்டு உள்ள நிலையில் அப்புதிய வீடு 110 கேவி தஞ்சாவூர் – திருவாரூர் மின்பாதையின் இடையில் 24 மற்றும் 25 கோபுர மின்பாதைக்கு அருகே பக்கவாட்டில் 5.1 மீட்டர் இடைவெளியின்றி கட்டிடம் உள்ளதாலும் பாதுகாப்பு கருதியும் TANTRANSCO அறிக்கையின் படியும், EHT மின்பாதைக்கு இடையில் கட்டிடம் உள்ளதால் புதிய மின் இணைப்பு வழங்க பரிசீலிக்க இயலவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்க்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிக்கின்றன.

1. நிறுவப்பட்ட உயரழுத்த மின்தொடர் கட்டமைப்பிற்கும் கட்டிடத்திற்கும் இடையே உள்ள இடைவெளி குறித்து விதிமுறைகளில் கூறப்பட்டது யாது?

2. மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கும் மின்பாதைக்கும் போதிய இடைவெளி இருப்பதாக கூறி தன்னுடைய புதிய வீட்டிற்கு மின் இணைப்பு கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சாத்தியமா?

## 8.0 <u>வழக்கெழு வினா 1–ற்கான தீர்வு:</u>

8.1 மின்பாதைக்கும், கட்டிடத்திற்கும் உள்ள இடைவெளி குறித்த விதிமுறைகள் பற்றி அறிந்து கொள்ள நாம் CEA (measure relating to safety and electric supply) Regulations 2023 இன் 63 வது விதி, Chapter VII ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***63. Clearances from buildings of lines of voltage exceeding 650 V. –***

*(1) An overhead line shall not cross over an existing building as far as possible and no building shall be constructed under an existing overhead line.*

*(2) Where an overhead line of voltage exceeding 650 V passes above or adjacent to any building or part of a building it shall have on the basis of maximum sag a vertical clearance above the highest part of the building immediately under such line, of not less than, –*
*(i) for lines of voltages exceeding 650 V and up to and including 33 kV - 3.7 metre;*
*(ii) for lines of voltages exceeding 33 kV - 3.7 metre plus 0.30 metre for every additional 33 kV or part thereof.*

*(3) The horizontal clearance between the nearest conductor and any part of such building shall, on the basis of maximum deflection due to wind pressure, be not less than, –*
*(i) for lines of voltages exceeding 650 V and up to and including 11 kV - 1.2 metre*
*(ii) for lines of voltages exceeding 11kV and up to and including 33 kV - 2.0 metre;*
*(iii) for lines of voltages exceeding 33 kV - 2.0 metre plus 0.3 metre for every additional 33 kV or part thereof.*
*(4) For high voltage direct current systems, the vertical and horizontal clearances, on the basis of maximum deflection due to wind pressure, from buildings shall be maintained as below:*

| *Sl. No.* | *High Voltage Direct Current* | *Vertical Clearance (metre)* | *Horizontal Clearance (metre)* |
|---|---|---|---|
| *1.* | 100 kV | *4.6* | *2.9* |
| *2.* | 200 kV | *5.8* | *4.1* |
| *3.* | 300 kV | *7.0* | *5.3* |
| *4.* | 400 kV | *7.9* | *6.2* |
| *5.* | 500 kV | *9.1* | *7.4* |
| *6.* | 600 kV | *10.3* | *8.6* |
| *7.* | 800 kV | *12.4* | *10.7* |

*(5) The vertical and horizontal clearances shall be as measured as illustrated in Schedule VIII C.*
*Explanation. – For the purposes of this regulation, the expression "building" shall be deemed to include any structure, whether permanent or temporary."*

8.2 மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது என்னவென்றால் கட்டிடத்திற்கும் நிறுவப்பட்ட உயரழுத்த 110 KV மின்பாதை கட்டமைப்புக்கும் இடையே

உள்ள இடைவெளி (Horizontal *clearance) 2.9 metres,* (Vertical *clearance) 4.6 metres* இருக்க வேண்டும் என்று தெரியவருகிறது.

## 9.0 <u>வழக்கெழு வினா 2–ற்கான தீர்வு:</u>

9.1 மேல்முறையீட்டாளர் திருமதி R. தேனாம்பிகா, W/o. M. ஞானசேகரன், தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட 3323/4, நேதாஜி தெரு, பாத்திமா நகர், நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர் என்ற முகவரியில் புதிதாக வீடு கட்டி வருவதாகவும், அந்த புதிய வீட்டிற்கு தற்காலிக மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலமாக விண்ணப்பம் அளித்ததாகவும், அதனை தொடர்ந்து தனது இடத்தை கள ஆய்வு செய்து தன் கட்டிடத்திற்கு உரிய கட்டிட அனுமதி சான்றை பெற்று மின்வாரிய அலுவலகத்தில் சமர்ப்பித்து மின்இணைப்பு பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.2 இந்நிலையில் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்து அதனை பெற்று வந்து மின்வாரிய அலுவலகத்தில் சமர்ப்பிக்கச் சென்ற பொழுது தன்னுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக கூறி மின் இணைப்பு வழங்கிட மறுக்கப்பட்டதாகவும், அதற்கான காரணமாக தனது புதிய வீட்டிற்கும் உயர் மின்னழுத்தப்பாதை 110 KV (EHT)க்கும் 2.9 மீட்டர் இடைவெளி இல்லை என்ற தவறான விளக்கத்தை கொடுத்து கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக புதிதாக வீடு கட்டி முடித்துவிட்ட நிலையிலும் தற்காலிக மின் இணைப்பு கூட வழங்கிட மறுத்து வருவதாகவும், எனவே, தன்னுடைய புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

9.3 அந்த பகுதியில் பெரும்பாலான வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மின்வாரியத்தின் 2.9 மீட்டர் இடைவெளி என்ற விதியை மீறியே அதன் அடியில் கட்டப்பட்டுள்ள நிலையிலும் இந்த விதியை கருத்தில் கொள்ளாமல் மின் இணைப்பு பெற்றுள்ள நிலையில் தனது ஒரே ஒரு சிறிய வீட்டிற்கு மட்டும் மின் இணைப்பு வழங்கிட மறுத்து வருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.4 தான் தற்பொழுது தனது வீட்டை வங்கிக்கடன், நகைக் கடன் மற்றும் இதர கடன்கள் பெற்று கட்டிய நிலையிலும் அந்த வீட்டிற்கு தன்னால் குடியேற முடியாத

நிலையில் தனது குழந்தைகளை அங்குள்ள பள்ளியில் சேர்த்து படிக்க வைத்துக் கொண்டு மிகுந்த சிரமமான நிலையிலும் பொருளாதார ரீதியாக தனது அனைத்து முதலீடுகளையும் இந்த வீட்டிற்கே செலவு செய்துவிட்டு புதிய வீட்டில் வசிக்க முடியாமல் மிகுந்த சிரமத்திலும், தானும் தனது குடும்பத்தினரும் மிகுந்த மன உளைச்சலில் வாழ்ந்து வருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். எனவே, இந்த மேல் முறையீட்டு மனுவை மதிப்பிற்குரிய இந்த குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும், இதற்குரிய அனைத்து ஆதாரங்களையும், கட்டிட அனுமதிச் சான்று, வீட்டு வரி ரசீது, மின்இணைப்பிற்ககான பணம் செலுத்திய ரசீது மற்றும் வீட்டின் புகைப்படம் என்று இது சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் நேரில் விசாரணைக்கு ஆஜராகும் பட்சத்தில் தங்கள் பார்வைக்கு சமர்பிப்பதாகவும், எனவே தனது தரப்பு நியாயங்களை ஏற்று உரிய நிவாரனம் வழங்கிட வேண்டுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.5 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் திருமதி. R.தேனாம்பிகா அவர்கள் புதிதாக வீடுகட்ட ஆயத்த பணிகள் (earth work) நடைபெற்று வந்த நிலையில் உதவி பொறியாளர்/TANTRANSCO–வின் 01.12.2022 நாளிட்ட கடிதம் மூலம் 110 KV தஞ்சாவூர் திருவாரூர் மிகை உயர் அழுத்த மின்பாதை (EHT) கோபுர எண்.24 மற்றும் 25 க்கு கீழே கட்டிடம் கட்ட அடித்தளம் அமைக்கும் பணி நடைபெறுவது கண்டறியப்பட்டு உதவி பொறியாளர், மின்பாதை தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மாரியம்மன் கோவில் அவர்கள் மூலம் கட்டிடம் வாரிய விதிகளின்படி மின்பாதையில் இருந்து பக்கவாட்டில் (Horizontal) குறைந்த பட்சம் 2.9 மீட்டர் இருக்குமாறு மாற்றி அமைக்க மேல்முறையீட்டாளருக்கு கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.6 ஆனால் மேல்முறையீட்டாளர் அதனை கருத்தில் கொள்ளாமல் தொடர்ந்து வீடு கட்டும் பணியை செய்து கொண்டு கடந்த 06.04.2023 அன்று தற்காலிக மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலம் விண்ணப்பித்துள்ளதாகவும், இடத்தினை ஆய்வு செய்த உதவி பொறியாளர்/ இ.பரா/ அருளானந்த நகர் அவர்கள் விண்ணப்பத்தினை நிறுத்தி (Hold) வைத்து குறைபாடுகள் உள்ளவை சரி செய்யுமாறு கோரியுள்ளதாகவும், போதிய கால இடைவெளியில் குறைபாடுகள் சரி செய்யவில்லை என்பதால் விண்ணப்பம் இரத்து

செய்யப்பட்டதாகவும், 110 KV தஞ்சாவூர்–திருவாரூர் மின்பாதைக்கு கீழே வீடு கட்டும் பணிகள் நடைபெறுவதாலும், பக்கவாட்டில் (Horizontal) குறைந்தபட்ச இடைவெளி 2.9 மீட்டர் இல்லாமல் மின்பாதைக்கு கீழே கட்டிடம் கட்டி உள்ளமையால் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள இயலாது என நுகர்வோருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.7 மேல்முறையீட்டாளர் தலைமைப் பொறியாளர்/ பகிர்மானம்/ தஞ்சாவூர் அவர்களிடம் மனு அளித்ததாகவும், இதனை தொடர்ந்து செயற்பொறியாளர்/ இயக்கம் / 230 KV துணை மின் நிலையம், தஞ்சாவூர் செயற்பொறியாளர் இ.பரா/ நகரியம்/ தஞ்சாவூர் மற்றும் புகார் மனுதாரர் ஆகியோர் மீண்டும் கள ஆய்வு செய்ததில் தாங்கள் கட்டி வரும் வீட்டிற்கு மேல் உட்புறம் நில இணைப்பு வயர் (Earth wire) செல்கிறது என்றும் எதிர்காலத்தில் அமைய உள்ள மின்பாதைக்கு அடியில் கட்டிடம் உள்ளது என்றும் வாரிய விதிகளின்படி கட்டிடத்திற்கும் மின்பாதைக்கும் 2.9 மீட்டர் இடைவெளி குறையாமல் இருக்க வேண்டும் என மேல்முறையீட்டாளரிடம் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.8 இந்நிலையில் புதிய வீடு முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு மீண்டும் 07.02.2024 அன்று புதிய மின் இணைப்பு வேண்டி மீண்டும் விண்ணப்பித்துள்ளதாகவும், இடத்தினை கள ஆய்வு செய்த உதவி பொறியாளர்/ இபரா/ அருளானந்த நகர் அவர்கள் 26.02.2024 அன்று நிறுத்தி வைத்து குறைபாடுகள் உள்ளவற்றை சரி செய்ய கோரியுள்ளதாகவும், (Application put on hold for attending defects in Horizontal clearance from 110KV tower line to building is not adequate) குறைபாடுகள் சரி செய்யாத நிலையில் கடந்த 07.03.2024 ல் ரத்து செய்ய உதவி பொறியாளர் இபரா/ அருளானந்த நகர் அவர்கள் பரிந்துரை செய்த விண்ணப்பம் செயற்பொறியாளர் அலுவலகத்தில் 14.03.2024–ல் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.9 மேற்படி புதிய கட்டிடத்தை மின் விசையுடன் தொடர் பணி/ திருச்சி (Hot Lines) மூலம் அளவீடு செய்யப்பட்டதாகவும், HOT Lines அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர்/ மின்பாதை/ தஞ்சாவூர் அவர்களின் வரைபட கடித நகல் இணைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இந்நிலையில்

எதிர்மனுதாரர் சமர்ப்பித்த உதவி செயற்பொறியாளர்/ மின்விசையுடன் தொடர்பு பணி/திருச்சி அவர்களின் 06.09.2024 நாளிட்ட அறிக்கையை ஆராய விரும்புகிறேன். அந்த அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்**

அனுப்புனர்
உதவி செயற் பொறியாளர்,
மின்விசையுடன் தொடர்பு பணி,
திருச்சி.

பெறுநர்
செயற் பொறியாளர்,
இயக்கம்,
திருச்சி.

க.எண்.உ.செ.பொ./மி.வி.தொ.ப /கோப்பு. 15 /எண். 158 /24,நாள்.06.09.2024

ஐயா ,

பொருள் : மின்சாரம் –மின்விசையுடன் தொடர்பு பணி /திருச்சி -110 கே .வி. தஞ்சாவூர் - திருவாரூர் உயர் அழுத்த மின்பாதைக்கும் கட்டிடத்திற்கும் இடையிலான தூரம் அளக்கப்பட்டு அதன் விபரம் தெரிவித்தல் தொடர்பாக.

பார்வை:1.செ.பொ./இபார/நகரி/தஞ்சை/TA/கோ.Hotlines/அ.எண்.386/24, நாள்.05.09.2024
2.TM 284 dated 06.09.24 from EE/O/Thanjavur

**********

பார்வையில் காணும் கடிதத்தின் அடிப்படையில், உயர் மின் அழுத்த மின்பாதைக்கும் கட்டிடத்திற்கும் இடையே உள்ள இடைவெளி அளவு மின்விசையுடன் தொடர்புபணி/திருச்சி மூலம் முறைப்படி 06.09.2024 அன்று அளக்கப்பட்டு அதன் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வீட்டு முகவரி | உயர் அழுத்த மின்பாதை |
|---|---|---|
| 1. | திருமதி.R.தேனாம்பிகா, க/பெ,M.ஞானசேகரன், 3323/4,நேதாஜி தெரு, பாத்திமா நகர், தஞ்சாவூர். | 110 கி.வோ. தஞ்சாவூர் – திருவாரூர் மின்பாதை Loc.No.24-25 |

மேற்கண்ட முகவரியில் கட்டப்பட்டுள்ள கட்டிடமானது அதன் அருகே தரையில் இருந்து **13.9 metre** உயரத்தில்(Bottom Conductor) செல்லும் 110 KV தஞ்சாவூர் – திருவாரூர் உயர் மின் அழுத்த மின்பாதையிலிருந்து **5.1 metre** பக்கவாட்டு இடைவெளி தூரத்தில் அமைந்துள்ளது

மேற்குறிப்பிட்ட அளவுகளானது உதவி பொறியாளர்/மின்பாதைகள் /மாரியம்மன் கோவில் மற்றும் உதவி பொறியாளர்/இ. கா/அருளானந்தன் நகர்/ தஞ்சாவூர் அவர்களது முன்னிலையில் அளக்கப்பட்டது.

Sd/***06.09.24
உதவி செயற் பொறியாளர்
மின்விசையுடன் தொடர்பு பணி
திருச்சி

நகல்
உ செ பொ/மின்பாதைகள்/தஞ்சாவூர்

9.10 மேற்கண்ட அறிக்கையின்படி மேல்முறையீட்டாளரின் கட்டிடமானது 110 KV தஞ்சாவூர் – திருவாரூர் உயர் மின் அழுத்த மின்பாதையிலிருந்து 5.1 மீட்டர் பக்கவாட்டு

இடைவெளி தூரத்திலும், 13.9 மீட்டர் உயரத்தில் (Bottom conductor) அமைந்துள்ளது தெரியவருகிறது. இது CEA (measure relating to safety and electric supply) Regulations 2023 இன் 63 வது விதியில் தெரிவிக்கப்பட்ட பாதுகாப்பு இடைவெளியான (Horizontal *clearance) 2.9 metres,* (Vertical *clearance) 4.6 metres* –ஐ விட அதிகமாக இருப்பது தெரியவருகிறது. எனவே, மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கும் மின்பாதைக்கும் போதிய இடைவெளி இருப்பது தற்பொழுது உள்ள நிலையில் தெரியவருவதால் மேல்முறையீட்டாளரின் புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

**10.0 <u>முடிவுரை</u>:**

10.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கும் மின்பாதைக்கும் போதிய இடைவெளி இருப்பது தெரியவருவதால் மேல்முறையீட்டாளரின் புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

10.2 மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றிய பின்பு அது தொடர்பான அறிக்கையை எதிர்மனுதாரர் 30 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

10.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 54/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி R. தேனாம்பிகா, – By RPAD
க/பெ. ஞானசேகரன்,
எண்.2/1, பிள்ளையார் கோவில் தெரு,
(தலைமை தபால் நிலையம் எதிரில்),
பட்டுக்கோட்டை – 614 601.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ நகரியம்/தஞ்சாவூர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10A, TNEB, கோர்ட் ரோடு, தஞ்சாவூர் – 613 001.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரியம்/தஞ்சாவூர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10A, TNEB, கோர்ட் ரோடு, தஞ்சாவூர் – 613 001.

4. உதவி மின்பொறியாளர்/ இ&ப / அருளானந்த நகர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு, தஞ்சாவூர் – 613 403.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு, தஞ்சாவூர் – 613 007.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.